1973 மார்ச் 10]

THIRU N. DENNIS : May I know whether the survey made has indicated the pattern of demand of consumers?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The question is whether the statistician considered also the pattern of demand of consumers. He has taken certain industries. Actually he has questioned some consumers and has come to the conclusion that prices of commodities sold in the supermarket are lower than the prices prevailing in private shops.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான்கு சிறப்பு அங்காடிகளில்தான் இந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏனைய பகுதிகளிலும் இந்த ஆய்வு நடத்தி விலைவாசிகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் திட்டவட்டமான ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான்கு சிறப் பங்காடிகள் குறிப் பாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மற்ற சிறப்பு அங்காடிகளிலும் இம்மாதிரி ஆய்வு எடுத்துக் கொள்ளலாம். திருச்சியை எடுத்துக் கொண்டால் கூட அங்கு விலைகள் குறைவாக இருக்கின்றன என்பதற்கு இது அடையாளம் என்று கருது கிறேன்.

திரு. எம். தேவராசன் : இந்தச் சிறப்பங்காடிகள் லாபத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றனவா அல்லது சேவையைப் பிரதானமாகக் கொண்டிருக் கின்றனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இரண்டையும் முக்கியமாகக் கருது கின்றன. சேவை முக்கியம், அதே சமயத்தில் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் தங்கள் காலில் நிற்க வேண்டும்; நட்டம் வரக்கூடாது. அதற்காக லாபம் வர வேண்டுமென்றாலும் கொள்ளை லாபமாக இருக்கக்கூடாது. நியாயமான லாபம் இல்லை என்றால் எந்தக் கூட்டுறவு நிறுவனமும் தொடர்ந்து நடைபெறாது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any instance of dismissal of purchasing officers or clerks in Kamadhenu in Madras for having paid higher prices?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, if any case of high prices being charged at any Super Market is brought to the notice of the department, we will take action.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சில சிறப்பங்காடிகளில் துணிகளுடைய விலைகள் ஏனைய வணிகர்கள் விற்பதை விடக் கூடுதலாக இருக்கின்றன என்று நான் ஒரு துணி வணிகன் என்ற முறையில் அறிந்திருக்கிறேன். கொள்முதல் செய்பவர்களிடமிருந்து வாங்குவதற்குப் பதிலாக நேரடியாக மில்களிடமிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எல்லாச் சிறப்பு அங்காடிகளுக்கும், கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கும் மில்களில் இருந்தே நேரடியாகக் கொள் முதல் செய்வதற்கு முன்னோடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தச் சிறப்பு அங்காடிகளில் அத்தியாவசியப் பண்டங்களின் விலையைப் பிரசுரம் செய்து மக்கள் வாங்குவதற்கு எளிதாக என்ன ஏற்பாடுகள், சிறப்பான அம்சங்கள் ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தச் சிறப்பு அங்காடிகள் எல்லாவற்றிலும் அத்தியாவசியப் பண்டங்கள் மட்டுமல்லாது எல்லாப் பண்டங்களின் விலைகளும் எழுதிப் போடப்படுகின்றன. தனியார் துறைக் கடைகளில் இருக்கும் விலையைவிட குறைவாகவேதான் இருக்கிறது. அதைத் தவிர வேறு விளம்பரம் செய்வது நல்லதா என்றும் யோசிக்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. எஸ். வடிவேல் : தற்போது சிறப்பு அங்காடிகள் குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கின்றன. ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் சிறப்பு அங்காடிகள் வைத்தால் மக்களுக்குச் சவுகரியமாக இருப்பதோடு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க முடியுமே. அதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தாலுகா தலைநகரங்களில் கூட்டுறவுத் துறையில் மினி சூப்பர் மார்க்கட்டுகள் இரண்டாயிரம் ரூபாய் அளவுக்கு வியாபாரம் ஆகக்கூடிய அளவுக்கு திறப்பதற்கான திட்டம், இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்தப் பண்டங்களின் விலைவாசிகளை ஆய்வுக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாதங்களுக்கு முன்னால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது? கோவை சிந்தாமணியில் வெளியில் விற்கும் விலையைவிட மளிகைச் சாமான்கள் விலை கூடுதலாக இருக்கிறது என்று சொல்லப்படுவதை அரசு அறியுமா?

1973 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்தக் குறிப்பிட்ட பண்டங்களோ, பொருள்களோ எந்தச் சிறப்பங்காடியிலும் தனியார் துறைக் கடைகளை விட அதிகமாக விற்கப்படுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அல்லது எனக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பல கோடி ரூபாய்க்கு கோவை சிந்தாமணியில் பண்டங்கள் விற்கப்படுகின்றன. மக்கள் பெருங்கூட்டமாகச் சென்று வாங்குகின்றனர். அதற்குப் போட்டியாகத் திறக்கப்பட்ட கடைகள் எல்லாம் சாத்தப்பட்டு விட்டன என்பதை அங்கு விலைகள் குறைவாக இருக்கின்றன என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: கோவை கூட்டுறவுச் சிறப்பங்காடியில் தரமான பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கிற அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கிறது. அது மேலும் விஸ்தரிக்கப்படுமா? ஜனங்கள் மேலும் வந்து வாங்கிச் செல்லும் அளவுக்கு பஸ் வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பஸ் வசதி இப்போதே செய்யப்பட்டு வருகிறது. இதை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சிந்தாமணி நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டால் கூடக் கவனிப்பார்கள்.

திரு. க. ஜெபமாலை: அந்தச் சிறப்பங்காடிகளில் பணி புரிகின்றவர்களில் ஆண்கள் அதிகமா அல்லது பெண்கள் அதிகமா? யாருக்கு முக்கியத்துவம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அதுபற்றி என்னால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. விற்பனை செய்கின்ற இடத்தில் ஆண் ஊழியர்களும் இருந்தார்கள், பெண் ஊழியர்களும் இருந்தார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்ல முடியும்.

திரு. த. சோலையா: சிறப்பு அங்காடிகளில் அரசு ஆய்வு செய்ததில் விலை குறைவாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விலை குறைவாக இருக்கின்ற காரணத்தால் அங்கே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது லாபம் ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொன்ன சிறப்பங்காடிகள் எல்லாவற்றிலும் லாபந்தான் ஏற்படுகிறது. ஒவ்வொரு பண்டத்திலும் சற்று லாபம் குறைவாக இருந்தாலும் மொத்த விற்பனை அதிகமாக இருக்கும் காரணத்தால் லாபத்தில் நடைபெற்று வருகின்றன.